பத்தாம் வகுப்பு - அறிவியல்

அலகுத்தேர்வு -17

மொத்த மதிப்பெண் : 25

அலகு : 17.தாவரங்கள் மற்றும் விலங்குகளில் இனப்பெருக்கம்

நேரம் : 45 நிமிடம்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடு. 4 x 1 = 4

1. இலைகள் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம் ----------------------

அ) வெங்காயம் ஆ) வேம்பு இ) இஞ்சி

ஈ) பிரையோஃபில்லம்

2. சின்கேமியின் விளைவால் உருவாவது ------ ----------------------

அ) சூஸ்போர்கள் ஆ) கொனிடியா

இ) சைகோட்(கருமுட்டை)

ஈ) கிளாமிடோஸ்போர்கள்

3. விந்து உருவாக்கத்திற்கு ஊட்டமளிக்கும் பெரிய நீட்சியடைந்த செல்கள்

அ) முதல்நிலை விந்து வளர் உயிரணு

ஆ) செர்டோலி செல்கள்

இ) லீடிக் செல்கள்

ஈ) ஸ்பெர்மட்டோகோனியா

4. கீழ்க்கண்டவற்றுள் எது IUCD ?

அ) காப்பர் – டி

ஆ) மாத்திரைகள் (Oral Pills)

இ) கருத்தடை திரைச் சவ்வு

ஈ) அண்டநாளத் துண்டிப்பு

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக. 2 x 1 = 2

1. கருவுறுதலுக்குப் பின் சூற்பை ------------- ஆக மாறுகிறது.

2. குழந்தை பிறப்பிற்குப் பின் பால் சுரப்பிகளால் சுரக்கப்படும் முதல் சுரப்பு -------- எனப்படும்

## III. பொருத்துக. (2)

| | | |
|---|---|---|
| அ) குழந்தை பிறப்பு | – | 1) கருவுறுதலுக்கும் குழந்தை பிறப்பிற்கும் இடைப்பட்ட கால அளவு |
| ஆ) கர்ப்ப காலம் | – | 2) கருவுற்றமுட்டை எண்டோமெட்ரியத்தில் பதிவது |
| இ) அண்ட அணு வெளியேற்றம் | – | 3) கருப்பையிலிருந்து குழந்தை வெளியேற்றம் |
| ஈ) கரு பதித்தல் | – | 4) கிராஃபியன் பாலிக்கிள்களிலிருந்து முட்டை வெளியேறுதல் |

## IV. கீழ்க்கண்ட கூற்று சரியா, தவறா எனக் கூறுக. தவறை திருத்தி எழுதுக. 2 x 1 =2

1. விதைகள் பாலின இனப்பெருக்கத்தின் மூலம் உருவாகின்றது.

2. ஈஸ்ட்ரோஜன் மற்றும் புரோஜெஸ்டிரானின் மிகை சுரப்பு மாதவிடாய்க்கு காரணமாகிறது.

## V. சுருக்கமாக விடையளி : 5 x 2 = 10

(ஏதேனும் ஐந்து வினாவிற்கு மட்டும் விடையளி)

1. சூலகத்தின் எப்பகுதியில் மகரந்தத்தூள் முளைத்தல் நடைபெறுகிறது?

2. விந்து செல்லின் அக்ரோசோமில் காணப்படக்கூடிய நொதியின் பெயரென்ன?

3. கீழ்க்கண்ட நிகழ்வுகள் பெண்ணின் இனப்பெருக்க மண்டலத்தில் எந்த பாகத்தில் (உறுப்பில்) நடைபெறுகிறது ?

அ) கருவுறுதல் ஆ) பதித்தல்

4. உடல இனப்பெருக்கம் ஏன் குறிப்பிட்ட தாவரங்களில் மட்டும் நடைபெறுகிறது ?

5. மூவிணைவு – வரையறு.

6. ஆண்களின் இரண்டாம் நிலை இனப்பெருக்க உறுப்புகளைக் கூறுக.

7. தாயின் கருப்பையில் வளர்கின்ற கருவானது எவ்வாறு ஊட்டம் பெறுகிறது ?

## VI. விரிவான விடையளி : 1 x 5 = 5

(ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி)

1. பூக்கும் தாவரத்திலுள்ள சூலகத்தின் அமைப்பை விளக்குக.

2. மாதவிடாய் சுழற்சியின் நிலைகள் யாவை ? அந்நிலைகளின் போது அண்டகம் மற்றும் கருப்பையில் நிகழும் மாற்றங்களைக் குறிப்பிடுக.